


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், களியக்காவிளை - திருவனந்தபுரம் சாலையில் கடத்தி சென்ற ரேஷன் அரிசியை, மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் இன்று (19.12.2016) பார்வையிட்டார். மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ உடனுள்ளார்.

செ.வெ.எண்: 885/2016 நாள்: 19.12.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள்,**
**களியக்காவிளை - திருவனந்தபுரம் சாலையில்**
**கடத்தி சென்ற ரேஷன் அரிசியை**
**இன்று (19.12.2016) மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் பார்வையிட்டார்.**

களியக்காவிளை - திருவனந்தபுரம் சாலையில் கடத்தி சென்ற ரேஷன் அரிசியை இன்று (19.12.2016) மாவட்ட ஆட்சியர் வளாகத்தில், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பார்வையிட்டார்.

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், களியக்காவிளை - திருவனந்தபுரம் சாலையில் இன்று (19.12.2016) அதிகாலை 3.00 மணியளவில் செங்கவிளை என்னும் இடத்தில், பறக்கும் படை குழு வட்டாட்சியர் திரு. இக்னேஷ்சியர் சேவியர் அவர்கள் தலைமையில் துணை வட்டாட்சியர் திரு. சந்திரசேகர், வருவாய் ஆய்வாளர் திரு. ராதாகிருஷ்ணன், ஓட்டுநர் திரு. ஜாண்பிரைட் ஆகியோர்களால் வாகன தணிக்கை மேற்கொண்டிருந்த போது, அவ்வழியாக வரப்பெற்ற KL.02.H.6978 - லாரியினை சோதனை செய்த போது, பொது மக்களுக்கு நியாயவிலை கடை மூலம் வழங்கப்படும் ரேசன் அரிசி சுமார் 10,000 கிலோ கேரள மாநிலத்திற்கு கடத்தி சென்றது தெரியவந்ததால் அவ்வாகனம் மற்றும் 10,000 கிலோ ரேசன் அரிசியினை கைப்பற்றி, கோணம் கிட்டங்கியில் ஒப்படைக்கப்பட்டது. மேலும் வாகனத்தில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆய்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ.இளங்கோ, மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி. சின்னம்மாள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.